
# ஈழத்து தமிழ் எதிர்ப்பு இலக்கியம் ஒரு பார்வை!

எம். பௌசர்



கவிதையை நாங்களும் எழுதுகிறோம். அக்கவிதையின் வெளிப்பாட்டில் எங்களின் ஆற்றாமை உள்ளது, எங்களின் கண்ணீர் உள்ளது, எங்களின் கோபம் உள்ளது, எங்களின் வீரமுள்ளது, எங்களின் வெற்றியுள்ளது, எங்களின் தோல்வி உள்ளது, எங்களின் சகிக்கமுடியாத முகங்கள் உள்ளது, எங்கள் கவிதைகளில் எங்கள் வாழ்வுள்ளது, எங்கள் மண்ணுள்ளது, இன்னும் எங்களுடன் உள்ளது எல்லாமே எங்கள் கவிதைகளிலுமுள்ளது.

ஈழத்து தமிழ்க் கவிதையில் இலக்கியத்தில் பெரும் அரசியல் வாடை அடிக்கிறதென மூக்கைப் பொத்திக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். "நான் தீப்பற்றிக்கொண்டிருக்கும் போது நெருப்பாக இருக்கிறேன்" என்பதை நிரூபிப்பதற்கு எந்த இலக்கிய விமர்சகனும் தேவையில்லை.

ஈழத்து தமிழ் வாழ்வு பல்வேறுபட்ட ஆதிக்கக் கூறுகளால் கட்டுண்டு கிடக்கிறது. இதில் பிரதானம் இனத்துவ ஆதிக்க நிலை, பின் வர்க்கமுரண்பாடுகள், சாதியப் பிரச்சினை, மத மேலாத்திக்கம், பெண்ணிய அடிமைத்தனம், பிரதேச வேறுபாடுகள், சிந்தாந்த மேலாதிக்கம், இவைகளுள் பல உட்கூறுகள் தேசியவாத இலக்கியம், சோசலிஸ முற்போக்கு இலக்கியம், பிற்போக்கு முதலாளித்துவ இலக்கியம் என பல தளங்களின் ஊடே பல தளங்களின் உக்கிரமான தாக்களின் வெளிப்பாடாக ஈழத்தில் தமிழ் இலக்கியம் பிறக்கின்றது, பிறந்திருக்கின்றது.

இன்னொரு வகையில் சொன்னால்; எதன் எதனால் அடக்கப் படுகிறார்களோ, தாக்கத்திற்குள்ளாகிறார்களோ, அல்லது பாதிக்கப்படுகிறார்களோ, அல்லது ஈர்க்கப்படுகிறார்களோ, அதன் விளைவான உணர்வின் வெளிப்பாடாக ஈழத்து தமிழ் இலக்கியம் மலர்ந்து வந்திருப்பதைக் காண்கின்றோம். ஈழத்து பூதந் தேவனாரின் இலக்கிய முயற்சியில் தொடங்கி இன்றைய "கோணஸ்வரிகள்" பற்றிய "கலா" வரை இதுவாகத்தானிருக்கிறார்கள்.

எமது ஈழத்து தமிழ் இலக்கியத்தில் பொருளாதார சுரண்டலுக்கு எதிரான குரல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஆதரிக்கும் குரல், சாதியத்திற்கு எதிரான குரல், மதமேலாதிக்கத்தை வலியுறுத்தும் குரல், மதமேலாதிக்கத்தை எதிர்க்கும் குரல், அடக்குமுறைகளுக்கு எதிரான குரல், அடக்குமுறையை ஆதரிக்கும் குரல், தேசியவாதத்தை ஆதரிக்கும் குரல், பண்முகப்பாட்டை வலியுறுத்தும் குரல், பெண்ணியப் பார்வையை மறுக்கும் குரல், அதை வலியுறுத்தும் குரல்கள் என காயங்களினூடே கண்ணீர் விடுவதாகவும், காயங்களிடையே புன்னகைகள் பூப்பனவாகவும் உள்ளன.

இப்புகைப் புலனுக்குள் இருந்துதான் ஈழத்து தமிழ் இலக்கியத்தின் விதைகள், உணர்வுகள் வெளிப்பட்டிருக்கின்றன. தமிழில் பாரதியும் அடக்குமுறை நிறைந்த சூழலில் இருந்துதான் வெளிப்பட்டான்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உலக இலக்கிய வரலாற்றில் மாற்றுக் கு ரல்களுக்கு ஒரு முக்கிய இடமுள்ளது. மாற்றுக் கு ரல்களின் வெளிப்பாடான இலக்கியங்கள் மனசாட்சியு டன் ச ம்பந் தப்பட்டது என்பதால் அது தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறதாக எனக்குப்படுகிறது.

1980 ம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு போலந் து நாட்டுக் கவிஞர் ஷொஸ் வோ மி லோஸ்ஸிற்கு வழங்கப்பட்ட போது அவர் நோபல் பரிசை ஏற்றுக் கொண்டு ஆற்றிய உரையின் கு றிப்பொன்று எனது வி சேட கவனத்தை ஈர்த்தது.

அவர்: "இன்று ஒரு கவிஞரை நாடு கடத்துவது பன்னெடுங்காலப் பயிற்சியல்ல. அண்மைக்கால கண்டுபிடிப்பொன்றின் சிக்கலெதுவுமற்ற செயற்பாடேயாகு ம். அதாவது எவனுடைய கையில் அதிகாரமிருக்கின்ற தோ அவன் தணிக்கை மூலம் விதிக்கின்ற தடைகளுடன் சொற்களின் கருத்துக்களை மாற்றுவதன் மூல ம் மொழியையு ம் கட்டுப்படுத்தி விட முடிகிறது. அது சிறைப்பட்டிருக்கு ம் ஒரு சமூதாயத்தின் நின்று நிலைக்கக் கூடிய சில தன்



மைகளைப் பெறுகின்றது. உண்மையைத் தேடி ஒரு கவிஞர் கடன் வாங்கப்பட்ட மொழி நடைகளிலிருந் து தன் னை விடுவித்துக் கொள்வதற்கு இடைவிடாது பாடுபடுகிறார் என்று நாம் எடுத்துக் கொண்டால் மட்டு மே. அவர் பயங்கரப் பேர்வழியாவார். ஓர் அறையில் இருக்கு ம் யாவரு ம் ஒரு மனதாக சதி செய்பவர்கள் போல் மௌனமாக இருக்கையில் உண்மையை எடுத்துக் கூறும் ஒரு வார்த்தை. ஒரு துப்பாக்கி வெடி போல் மௌனத்தைக் கலைக்கு ம்" என்கிறார். ஈழத்தில் ஒரு துப்பாக்கி வேட்டு ம் கூட, ஒரு எதிர் கு ரலாகத்தான் வெடிக்கின்றது. துப்பாக்கியைக் கண்டு மிரளு ம் ம னோபாவ ம் எதிர்க்கு ரல் கேட்கப்படு ம் போது ம் ஏற்பட்டுவிடுகிறது. ஈழத்தில் எதிர்க் கு ரல்களை பூண்டொடு அழிக்கும் ஒரு கலாசாரம் வேர்விட்டு வளர்ந்து நிறுவன மயப்பட்டு நிற்கிறது. இருப்பினும் இவைகளுக்கு மத்தியிலும் ஆங்காங்கே எதிர்க் குரல்கள் எழுந் து கொண் டே இருக்கிறது. எமது வாழ் வு ம், சாவு ம் அரசியலால் தீர்மானிக்கப்படுவதினால் தான் என்ன வோ அரசியல் அழுத்தத்துடன் அல்லது அரசியற்காரணங்களினால் எமது இலக்கிய ம் அதிக ம் தாக்கு ண்டு ஓடுகிறது.

ஈழத்தில் ஆயு தப் போராட்ட ம் தீவிரமடைவதற்கு சற்று முந் தையான காலகட்டத்தில் படைக்கப்பட்ட இலக்கியங்களில் சாதிய இலக்கிய ம், மத இலக்கியம், தத்துவார்த்த இலக்கியம், இன அடையாள இலக்கியம் என அதன் அரசியல் அப்பட்டமாக வெளிப்பட்டு நிற்கிறது. ஈழத்து தமிழ் இலக்கியத்தில் நாம் பல் வேறு காரணகாரியத்திற்காக அடையாள ம் காட்டும் ஈழத்து பூதந் தேவனார், டானியல், மு. தளையசிங்கம், புதுவை இரத்தினதுரை, காசி ஆனந் தன், சி. சிவ சேகர ம், சுபத்திரன், நீலவாணன், சுபைர் இளங்கீரன், செ. யோகநாதன், செங்கை ஆழியான், பவானி, சட்டநாதன், யேசுராசா, சேரன், ஜெயபாலன் ஆத்மா சக்கரவர்த்தி, காலாமோகன், கருணாகரன், அறபாத் போன்ற அடையாளங்கள் அடங்கலாக பலர் உள்ளனர். இப்பெயர்கள், பெயர்களின் அடிப்படையில் அன்றி ஒரு போக்கை, அல்லது ஒரு காலகட்டத்தை கு றிப்பிடு ம் வசதிக்காக மட்டு மே கையாளப்பட்டுள்ளது. மேற்கூறிய நிலைப்பாடுகள் சார்ந் து வந் த இலக்கியங்கள் அதிகமாகவுள்ளன. இவற்றுக்கு வெளியில் நிற்பவர்கள் மிகச் சொற்பமானவர்களே.

தமிழகத்தில் தலித் இலக்கிய ம் ஒரு முக்கிய அரசியல் இலக்கியமாக பண்பாட்டுத் தளமாக, சமூக இலக்கிய இயக்கமாக மாறி அதற்கான ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அரசியல் தளமும் பெற்றது. ஆனால் ஈழத்தில் சாதிய எதிர்ப்பு இலக்கியம், ஒரு அரசியல் ரீதியான சமூக இலக்கிய நிறுவனமாக மாற முடியாது இருந்து வந் திருப்பதைக் காண்கிறோம். மஹாராஷ்ட்ரா, தமிழகம் போல் ஈழத்தில் தாழ் த்தப்பட்ட மக்களின் எதிர்ப்பு இலக்கியம் அரசியல் பண்பாட்டுத் தளத்தில் சமூக, இலக்கிய நிறுவனமாக தோற்றம் பெறவில்லை இதனால் ஈழத்து சாதிய எதிர்ப்பு இலக்கியம் தனக்கான எதிர்ப்புக் குரலில் நிறுவனத் தன்மையை இழந்து நின்றது. ஈழத்து சாதிய இலக்கியத்திற்கு என்.கே.ரகுநாதனின் கந்தன் கருணை நாடகம் தொடக்கம் டானியலின் பஞ்சமர் நாவல்களான பஞ்சமர், கோவிந் தன், அடிமைகள், கானல், பஞ்சகோணங்கள், தண்ணீர் போன்ற நாவல்களும் கவிஞர் பசுபதியின் "சங்கானைக்கென் வணக்கம்" என்ற 1986இல் தொழிலாளி இதழில் வெளிவந்த கவிதையும் டொமினிக் ஜீவாவின் எழுத்துக்களும் நல்ல உதாரணங்களாகும். சாதிய அடக்குமுறைக்கெதிரான இலக்கிய வெளிப்பாடுகளு ம், இனத் தேசிய அடக்குமுறைக்கெதிரான வெளிப்பாடுகளுமே ஈழத்து தமிழ் இலக்கியத்தின் மிக முக்கிய எதிர்ப்புக் குரல்களாக இருந்து வந்திருக்கின்றன. இக்குரல்கள் ஈழத்தின் அரசியல் காலகட்டங்களின் போக்குக்கு ஏற்ப மாறிமாறி முதல் தளங்களை எடுத்திருக்கிறது. 50, 60, 70களில் சாதியப் பிரச்சினை முக்கிய ஒரு எதிர்ப்புக் குரலாக ஈழத்து இலக்கியத்தில் இருந்திருக்கிறது. தேசிய இனப்பிரச்சினை ஈழத்து தமிழ்ச் சூழலில் உக்கிரம் பெறத் தொடங்கியவுடன் இன அடையாளம் தொடர்பான எதிர்ப்புக்குரல்கள் அதிகமாக எழத்தொடங்கின. "தமிழன்" என்ற அடையாளம் தமிழர்களை ஒரு பொதுத் தளத்தில் இணைக்கும் அரசியல் ரீதியான மையமாக மாற்றப்பட்டு விட்டது. சாதியத்திற்கெதிரான இலக்கியத்தில் எதிர்ப்புக் குரல்கள் இப்போது மெல்லவே ஒலிக்கிறது. ஆனால் தேசிய இனப்போராட்டத்திற்குள் சாதியம் இன்னும் அழிந் துவிடவில்லை. தமிழர்களுக்கு ள்ள ான அகமுரண்பாடுகள் தேசிய இனப் போராட்டத்திற்குள் மறைந்து நிற்கின்றன என்பதுதான் இதன் உண்மை.

தேசியப் பிரச்சினை அரசியல் போராட்டமாகவும் எதிர்க்குரலாகவும் ஈழத்து தமிழ்ச் சூழலில் வெடித்தெழுகின்றபோது அதனுள் தோன்றிய குறுந் தேசியவாத தன்மை காரணமாய் அதிகாரம் பற்றிய கேள்வியில், அதற்கு எதிராக, இலக்கியத்தில் மாற்றுக் குரல்களும் எழத்தொடங்குகின்றன. இதில் வடக்கு, கிழக்கு முஸ்லிம்களின் இன அடையாள எதிர்ப்பு இலக்கியம், மற்றும் ஒரு குறிப்பிட்ட அரசியல் கோட்பாட்டுக்கெதிரான எதிர்ப்பு இலக்கியங்களைக் காண்கிறோம். மலையக மக்களின் எதிர்ப்பு இலக்கியத்தையும் காண்கிறோம். இதில் முக்கியமானது மலையக எதிர்ப்பு இலக்கியம் ஈழத்தில் நீண்ட ஒரு காலகட்டத்தை கொண்டிருக்கிறது சி.வி. வேலுப்பிள்ளை, நடேசய்யர் தொடக்கம் இன்றைய இளம் தலைமுறையினர் வரை ஒரு நீண்ட பாரம்பரியம் காணப்படுகிறது. இம்மலையக இலக்கியத்தில் வர்க்க சிந்தனையும், சுரண்டலுக்கெதிரான குரலுமே அதிகம். இன அடையாளம் இரண்டாம் பட்ச காரணியாகவே உள்ளது. வடக்கிழக்கு முஸ்லிம் இன அடையாள எதிர்ப்பு இலக்கியம் தமிழர்களுடைய, குறிப்பாக விடுதலை அமைப்புகளுடைய தீவிர ஆயுத, இராணுவாதச்சூழல் அழுத்தம் பெற்ற 87க்குப் பின்னான காலத்திலேயே முளைவிடத் தொடங்குகின்றது.

ஈழத்து தமிழ் எதிர்ப்பு இலக்கியத்தில் "முறிந்த பனை" முக்கிய இடம் வகிக்கின்றது அவ்விலக்கியத்திற்கு கிடைத்த அங்கீகாரம் அந்நூலாசிரியர் ஒருவரின் படுகொலையின் மூலம் நிலை நாட்டப்பட்டது. இத்தொகுப்பு 1996ம் ஆண்டு நூலுருவில் வெளியிடப்பட்டது. "முறிந்த பனை" நூலாசிரியர்களில் ஒருவரும் இத்தொகுதி வெளியிடப்பட்டதன் பின் எதிர்க்குரலை சகிக்க முடியாத ஆதிக்க சக்திகளின் துப்பாக்கிக்கு பலியான கலாநிதி ராஜனி திரணகம் அவர்கள் 1989.09.15ம் திகதி தனது நண்பர் ஒருவருக்கு இறுதியாக எழுதிய கடித வரிகளை எடுத்தாள்வது இங்கு பொருத்தமென நினைக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"என்றாவது ஒரு நாள் ஒரு துப்பாக்கி என்னை, அமைதியாக்கி விடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது! மாறாக எனது வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் இச்சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையிலிருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் துப்பாக்கியாகவே அது இருக்கும்."

ஈழத்து தமிழ்ச் சூழலைப் பொறுத்து இது நிரூபணமாயிற்று.

இச்சூழலில் யார் யார் எல்லாம் துப்பாக்கிகள் வைத்திருக்கிறார்களோ, யார் யாரிடமெல்லாம் அதிகாரமிருக்கிறதோ தனிநபராயினும், நிறுவனமாயினும் அவர்களுக்கு எதிராக, நேரடியாக எதிர்க்குரல் எழுப்புவதை இங்கு காண்பது மிகவும் அதிகமாகவேயுள்ளது. ஒன்றிரண்டு புறநடைகளைத் தவிர. பெரும்பாலும் ஈழத்து எதிர்ப்பிலக்கியத்தின் மொழி குறியீடுகளுக்குள்ளும் பாதுகாப்பு எல்லைக்குள்ளும் தான் வாசம் செய்கிறது. அதனுடைய வாழ்வும், வெளிப்பாட்டுச் சூழலும் இச்சுற்றுகைக்குள்ளேயே நின்றுவிடுகிறது. இது மிகவும் பலவீனமான ஒரு அம்சமா? அல்லது இதுதான் தற்காப்பு நிலையா? ஆனால் நவீன தமிழ்க் கவிதைகளின் முன்னோடி எதிர்ப்பிலக்கியத்தின் மஹாகவி பாரதி இதற்கு வெளியில் வாழ்ந்தவன் என்பது மட்டும் உண்மை. அவனுடைய கவிதைகள் நேரடியாக அடக்குமுறைச் சக்திகளை தாக்கும் வல்லமை கொண்டிருந்தது. ஈழத்து தமிழ் எதிர்ப்பு இலக்கியத்தில் பாரதி போன்ற மிக உக்கிரமான எதிர்ப்புக் குரலை காணமுடியவில்லை.

1980 க்குப் பின்னான ஈழத்து தமிழ்க்கவிதையின் போக்கில் மிகத்துல்லியமாக ஏற்பட்ட மாற்றங்களில் பிரதானமானது தீவிர அரசியல் எதிர்ப்புக் கவிதைகள் என்கின்ற அடையாளம். 1980 ம் ஆண்டு, ஈழத்து தமிழ்ச் சூழலில் பாரிய நெருக்குவாரங்களை கொண்டுவர ஆரம்பித்த, அழுத்தம் நிறைந்த வரலாற்றின் வாசலாகும். வெளிப்படையாக இரத்தம் சிந்தும் புரட்சி வெடிக்கத் தொடங்கிற்று. ஆயுதக் கலாசாரம் வடக்கு கிழக்கின் ஒவ்வோர் கிராமங்களிலும் விதைக்கப்பட்டது. ஆயுதமேந்திய சப்பாத்துக்கால்களின் பூமி அதிரும் சப்தமும் இரவுகளின் அமைதியைக் குலைக்கும் நாய்க் குரைப்புகளும் எமது மண்ணின் வரலாறாயிற்று. வடக்கு கிழக்கு வாழ் மக்கள் உளவியல் தாக்கத்திற்கு அதிகமாக உட்படுகின்றனர். இந்த கொடூரமிக்க வாழ்வுக்குள் இருந்து எழுந்த கவிதைகள் அடக்கும் சக்திக்கு எதிரான வெளிப்பாடுகளை பிரதிபலித்தது. இங்கு எந்த இலக்கியக் கோட்பாடுகளுக்கும் அவகாசமிருக்கவில்லை.


இவ்வெதிர்ப்புக் கவிதைகளை எழுதிய பெரும்பான்மையானோரிடம். இலக்கியம் என்பது அழகியல் வெளிப்பாட்டிற்கான ஊடகமா? அல்லது இலக்கியம் என்பது மக்களுக்கானதா? என்கின்ற வாதப்பிரதிவாதங்களை மேவி நிற்பவர்களை அதிகமாகக் காணலாம். 1985ஆம் ஆண்டு வெளிவந்த சேரன், பத்மநாப ஐயர், யேசுராசா தொகுத்த "மரணத்துள் வாழ்வோம்" தொகுதி அக்காலகட்டத்தின் மனச்சாட்சியின் மிகப் பலமான எதிர்ப்புக் குரலாகும். அக்கவிதைத் தொகுதியில் முருகையன், மு. பொன்னம்பலம், எம்.ஏ. நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சேரன், ஜெயபாலன், சிவசேகரம், யேசுராசா, சு. வில்வரத்தினம், மு. புஸ்பராஜன், ஊர்வசி, மைத்ரேயி, இளவாலை விஜேயேந்திரன், ஔவை, செழியன் உட்பட இன்னும் பல கவிஞர்களின் எதிர்ப்புக் கவிதைகள் அத்தொகுதியில் உள்ளன. ஈழத்து எதிர்ப்புக் கவிதையின் இன நெருக்கடியின் தீவிரத்தை அத்தொகுப்பில் காணலாம். ஆனால் அத்தொகுப்பில் அன்று அவர்கள் பலர் எழுதிய கவிதைகளின் அரசியல் நிலைப்பாட்டுத் தளங்களில் இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனை மேலே நான் குறிப்பிட்ட கவிஞர்களின் 1985க்குப் பின்னான கவிதைகளில் வெளிப்படும் எதிர்ப்பண்பை இவர்களின் அரசியல் மாற்றத்தினூடாகத் தரிசிக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முடிகிறது. இக்கவிதைகளின் ஊடான எதிர்ப்பு வெளிப்பாட்டில் ஏற்பட்ட மாற்றம் ஒரு இயங்கியலாக செயற்படுகிறது. இப் போக்கில் மிகவும் சொற்பமானோரே அழகியலுடன் மிக நேர்த்தியாக தங்கள் கவிதைகளை வெளிப்படுத்தினர்.

இக்கால கட்டத்தில் எதிர்ப்புக் கவிதை எழுத வந் தோர் பலரை அடிப்படையில், தன்னின அடையாள உணர்வுள்ளவர்கள ாகவு ம் தன் மொழியை, தன் மண்ணை நேசிப்பவர்கள ாகவு ம் அடையாளப்படுத்தலாம்.



இன்னு ம் பலர் தன்னின அடையாளத்தை நேசிப்பதுடன் பிறசமூக மனிதர்களின் உணர்வுகளை நேசிப்பவர்கள ாகவு ம் அவர்களுக்கெதிரான அடக்குமுறைகளை கண்டிப்பவர்கள ாகவு ம் உள்ளனர். ஈழத்து தமிழ் எதிர்ப்புக் கவிதையில் தன்னுடைய இனம், தன்னுடைய சுதந் திரத்தை வலியு றுத்தி எழுதுபவர்கள் மிக அதிகம். அவர்களுக்கு மற்றவை பற்றிய எவ்விதமான பார்வைகளு ம், கேள்விகளு ம் இல்லை. இந் த வகையில் நியாயத்தின், தார்மீகத்தின் அடிப்படையில் ஈழத்து தமிழ் எதிர்ப்புக் கவிதையின் கு ரல் மிகவு ம் பலவீனப்பட்டு நிற்கிறது. ஒரு உண்மையான எழுத்தாளனின் பணி ஒரு அராஜகத்தை கண்டித்து இன்னொரு அராஜகத்திற்கு துணை போவதாக இருக்கக் கூடாது!

இரு முக்கியமான மாற்றங்கள் 1980 களின் ஒரு பாதிக்கு ப் பின்னான ஈழத்து தமிழ் எதிர்ப்புக் கவிதைகளில் மிகத் துல்லியமாகக் காணப்படுகின்றன.

ஒன்று, சிங்கள அரசின் அடக்கு முறைக்கெதிரான எதிர்ப்பு கவிதா வெளிப்பாடுகளுடன் தங்களுக்கு ள் ளே தோற்ற ம் பெற்ற நவபாசிசத்தின் அடி வேர்களை கேள்விக்குற்படுத்துவதாக எழும் எதிர்க்குரல்கள்.

இரண்டு, தமிழ் த் தேசியத்தினுள் சிறுபான் மை இனக்குழுவாக இருக்கு ம் முஸ்லி ம்கள் மீதான நெடுக்கு வாரங்களுக்கெதிரான முஸ்லி ம் இன நிலைப்பட்ட எதிர்ப்புக் கவிதைகள். இவை இரண்டு ம் மிக முக்கியமானவை. 1980 களின் நடுப்பகு திக்கு பின் ஈழத்து தமிழ் க் கவிதையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் அடையாளத்துடன் அல்லது அவர்களுக்கான அரசியல் உணர்வுகளைப் பேசும் கவிதைகள், கவிஞர்கள் தோன்றலாயினர்.

பொதுவாக சொல்வதானால் இன்றைய ஈழத்து தமிழ் எதிர்ப்புக்கவிதை, இன அடையாள உணர்வின் வெளிப்பாட்டில் அதிக கால் பதித்து நிற்கிறது. ஆனால் இதை கொஞ் ச ம் கொஞ்சமாக மீறி வருபவர்களையும் அடையாளப்படுத்தலாம். இங்கு தனி நபர்களின் பெயர்களைக் கு றிப்பிடுவதை விட அவர்களின் கவிதைக் கு ரலுக்கூடான கவிதை வெளிப்பாட்டினை உற்று நோக்கு ம் போது அது புலப்படுகிறது. அது அவர்களின் அரசியல் நிலைப்பாட்டாகவு ம் இருக்கலாம்.

கீ ழே நான் கு றிப்பிடு ம் இ ம்மூன்று கவிதைகளு ம் ஈழத்து எதிர்ப்பிலக்கியத்தின் பலதரப்பட்ட வெளிப்பாடுகளை காட்ட இங்கு கையாளுகி றேன்.

முதலாவது கவிதை

கலா எழுதிய
கோணேஸ்வரிகள்.....!
நேற்றைய அவளுடைய சாவு எனக்கு
வேதனையைத் தரவில்லை.
மரத்துப்பேய்விட்ட உணர்வுகளுள்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதிர்ந்து போதல் எப்படி நிகழும்?

அன்பான என் தமிழச்சிகளே
இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்?
ஆகவே; வாருங்கள்
உடைகளைக் கழற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக் கொள்ளுங்கள்
என் அம்மாவே உன்னையும் தான்.

சமாதானத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளை திறவுங்கள்.
பாவம்.
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்.

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்ளுங்கள்.
என் பின்னால்
எனது பள்ளித் தங்கையும் உள்ளாள்.
தீர்ந்ததா எல்லாம்
அவ்வளவோடு நின்று விடாதீர்!
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்.
ஆகவே:
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வொரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எம்மினம் தளிர்விடமுடியாதபடி.



சிங்கள சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

இரண்டாவது கவிதை

சி. சிவசேகரத்தின்
பூனைக்குத் தோழர்கள்

நண்பனே
நீ
அரசினரின் சித்திரவதை முகாமொன்றில்
செத்திருக்கலாமே;
அவர்கள் முழுகடித்த ஒரு கலத்தோடு போயிருக்கலாமே;
அவர்களுடைய துப்பாக்கி வேட்டுக்குப்
பலியாகியிருக்கலாமே;

இல்லையேல்
காணாமற் போனோருள் ஒருவனாக
புதைகுழியொன்றுள் அடையாளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இழந்திருக்கலாமே;

குண்டு விழுந்து
சரிந்த கூரையொன்றன் கீழோ
சாய்ந்த சுவரொன்றன் கீழோ
புதையுண்டிருக்கலாமே;

போகட்டும்.
அகதி முகாமொன்றில்
பட்டினியோ பெரும்பிணியோ உன்னை மெல்ல
அரித்திருக்கலாமே
ஆனாலும்
அவ்வாறு நிகழாமல் எமனுலகு போய் விட்டாய்.

உனக்காக இரங்குகிறான் இங்கொருவன்
நண்பனாம்.
நினைவுகளைக் கொஞ்சம் இரைமீட்டுப் பார்க்கிறான்
நிலையாமையென்றும் சாவின் நிச்சயமென்றும்
சொல்லுகிற வார்த்தை
சுடலை ஞானம் தான்.
உன் சாவைக் கொணர்ந்தவர்கள் அவனுக்கு இனியவர்கள்
உன் கொலையை, கொலைஞர்களை ஏசிடவும்
முடியாமல்
கொலைச் செயலை வீரமெனக் கொண்டாட முடியாமல்
திணறுகிறான், பாவம்.
சாவதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கையிலே
ஏனிந்த விதமாய் உன் நண்பனது வாயடைக்க
முதலைகளுங் கூடக் கண்களில் நீர்வற்ற
வானவெளியிலுந்தன் சாவினை நீ தேடினாய்?

(1998 ஒக்டோபரில் விமான விபத்தில் இறந்த சசி கிருஷ்ணமூர்த்தி பற்றிய சில இரங்கற் சொற்களின் அருவெறுப்பாக எழுதப்பட்டது)

மூன்றாவது கவிதை
ஆத்மாவின்
செங்கோல் = சிவப்பு + கோல்

அரசன் எழுந்தான்
அப்பாவிகளின் தொடை, கணைக்காலென்புகளால்
செய்யப்பட்டு
குழந்தைகளின் கன்னத் தசைகளால் போர்த்தப்பட்ட
ஆசனத்திலிருந்து
வலது கையில்
எழுவன் குளத்துச் சிங்கள மக்களின்
புத்தம் புதிய குருதி நிரம்பிய கிண்ணம்
ஒரு மிடறு குருதியருந்திபடி
திறந்து கிடந்த அடுத்த அறையை எட்டிப் பார்த்தான்.
அறைச் சுவரில்
ஆணியடித்துக் கொழுவப்பட்ட 103 தொப்பிகள்
காத்தான்குடிப் பள்ளிவாசலில்
சுட்டுக் குதறப்பட்டவர்களின் தலைகளிலிருந்து
கழற்றி எடுத்து வரப்பட்ட மாவீரச் சின்னங்களவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பக்கத்தில்
இரு கூறிடப்பட்டு வீசியெறியப்பட்ட சிறு பிள்ளையொன்றின்
குருதி பீய்ச்சியடிக்கப் பட்டு காய்ந்த சீமெந்துப் பேப்பர்.
பெருமிதத்தில் தனக்குள் சிரித்துக் கொண்ட அரசன்
திடுமென அதிர்ந்தான்.
மிக அருகில் எங்கோ பாங்கொலிக்கக் கேட்டான்.
அம்பிளந்துறைச் சந்தியில் மரண ஓலமெழுப்பிய
அதே 157 ஹாஜிமாரினதும் குரல் அசப்பில்.
மடுவுக்குள் பாதி புதைந்தும்
பட்டை வாய் வெடித்த காட்டு மரங்களில் தொங்கியும்
இரத்தம் தோய்ந்த வெண்ணிற 'ஜீப்பா'க்கள்
அரண்மனைக்கு வெளியே
காற்றிலசைவதும் கண்டான்.
காதை இறுகப் பொத்தியபடி
கதவை இழுத்து அடைத்துச் சாத்தி
அறைக்குள் மீளவும் வந்தமர்ந்தான்
அருகில்
தப்பித் தவறியும் எதனையும்
சிந்தித்து விடக் கூடாதென்பதற்காய்
கழற்றிய மூளை ஒரு கையிலும்
சயனைட் குப்பி ஒரு கையிலுமாய்
யாரிலோ அல்லது எதிலோ
விழுந்து வெடித்துச் சிதறி
தன் அரசனின் ஆணையைக் கோரி நிற்கும்
இயந்திரத் தனப்பட்டு இளைஞனாய்ப் போன
பன்னிரு வயதுத் தமிழ்ப் பாலகன்
மெல்லக் குனிந்து தன் அரசனைக் கேட்டான்
"முஸ்லிம்களைக் கொன்று கன நாளாயிற்றே
கொல்வதில்லையா இனி?"
அரண்மனை அதிரப் பேயிடியாய்ச்
சிரித்த அரசன் திருவாய் மலர்ந்தான்
"கொல்வதில்லை யென்றெதுவுமில்லை;
இப்போதில்லை!"

இம்மூன்று கவிதைகளின் ஊடாகவும் 80 க்குப் பின்னான ஈழத்து தமிழ் எதிர்ப்புக் கவிதையின் போக்குகளை அடையாளம் காணலாம்.

(சென்னையில் '2000 செப்டம்பர் 1, 2, 3' தேதிகளில் நடைபெற்ற 'தமிழ் இனி 2000' உலகத் தமிழ் மாநாட்டில் பேசியதின் சுருக்கம்.)

தொகுப்பு: தளவாய் சுந்தரம்

TOP

Copyright © Kumudam Publications Pvt.Ltd.
All rights reserved.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்